தினமணி

## முந்திரித் தோப்புகளை உருவாக்குவதில் விவசாயிகளுடன் அரசு இணைந்து செயல்படும் மாவட்ட ஆட்சியர்

First Published : 28 Jan 2012 09:35:55 AM IST

கடலூர், ஜன. 27: கடலூர் மாவட்டத்தில் புயலால் சேதம் அடைந்த முந்திரித் தோப்புகளை உருவாக்குவதில், விவசாயிகளுடன் அரசு இணைந்து செயல்படும் என்று மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ தெரிவித்தார்.

குடியரசு தினத்தை முன்னிட்டு கடலூர் மாவட்டத்தில் 683 ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டங்கள் நடந்தன. பண்ருட்டி வட்டம் காடாம்புலியூர் ஊராட்சியில் நடந்த கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ கலந்து கொண்டார்.

வரும் ஆண்டுக்கான வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக ஊராட்சியின் திட்ட அறிக்கைக்கு பொதுமக்களிடம் ஒப்புதல் பெறப்பட்டது. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள், வீடுகளில் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்துதல், கிராம சாலைகள் திட்டம் குறித்து விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

அப்போது ஆட்சியர் பேசியது: புயலில் பாதிக்கப்பட்டு உள்ள கடலூர் மாவட்டத்தில், சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில், அனைத்து கிராமங்களிலும் பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து மரங்களை நடவேண்டும். புயலில் பண்ருட்டி பகுதியில் முந்திரி மரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளன. முந்திரி விவசாயிகள் மறுவாழ்வு பெற, புதிய முந்திரித் தோப்புகளை உருவாக்க, விவசாயிகளுடன் இணைந்து செயல்பட அரசு உறுதி கொண்டு உள்ளது.

முதல் அமைச்சரின் உத்தரவின்பேரில் கடந்த 16-ம் தேதி பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில், முந்திரி விவசாயிகளுக்கு நிவாரணம் மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. விவசாயிகளின் கோரிக்கைகள் அரசுக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது. புயலில் பாதிக்கப்பட்ட மின் விநியோகம் போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டு உள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட தெரு விளக்குகளைச் சீரமைக்க, 57 ஆயிரம் புதிய மின் விளக்குகள் வரவழைக்கப்பட்டு, சம்பந்தப்படட ஊராட்சிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு உள்ளது. புயல் பாதித்த பகுதிகளில் 55 கிராமங்களில் மணிலா, கரும்புப் பயிர்களுக்கு 200 ஸ்பிரிங்களர், 200 ஸ்பிரேயர் இயந்திரங்களைக் கொண்டு நவீன முறையில் பாசன வசதி செய்யப் பட்டது.

மாவட்டத்தில் புயலால் சேதம் அடைந்த வீடுகளுக்கு நிவாரணமாக இதுவரை ரூ.116 கோடி வழங்கப்பட்டு உள்ளது. பயிர்ச் சேதங்களுக்கு நிவாரணமாக ரூ.120 கோடி ஒதுக்கப்பட்டு, இதுவரை ரூ.95 கோடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.


காடாம்புலியூர் பகுதிக்கு மட்டும் சேதம் அடைந்த பயிர்களுக்கு நிவாரணமாக ரூ.1.90 கோடி வழங்கப்பட்டு உள்ளது. நிவாரணம் தொடர்பாக விவசாயிகள் தங்கள் புகார்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் அமைக்கப்பட்டு உள்ள புகார் மையங்களில் தெரிவிக்கலாம். காடாம்புலியூர் ஊராட்சியில் வடிகால் வசதி, சிமெண்ட் சாலை, உலர் களம், குடிநீருக்கான ஆழ்குழாய் கிணறு, குடிநீர் மோட்டார் பம்புகளை சீரமைத்தல் உள்ளிட்ட பணிகளுக்கு மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டு உள்ளது என்றார் ஆட்சியர். சார் ஆட்சியர் கிரண் குராலா, ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் சீனிவாசன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் கலைவாணி, வட்டார வளர்ச்சி அலுவலர் துரை, ஊராட்சித் தலைவர் ஜெயராணி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**உணவுப் பொருள் பணவீக்கம் மைனஸ் 1.03 சதவீதம்**

ஜனவரி 28,2012,02:20



புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், ஜன., 14ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், மைனஸ் 1.03 சதவீதம் என்ற அளவில் பின்னடைவை கண்டுள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில் மைனஸ் 0.42 சதவீதம் என்றளவில் இருந்தது. ஆக, உணவுப் பொருள்களின் விலை, தொடர்ந்து நான்கு வாரங்களாக, எதிர்மறை வளர்ச்சியை கண்டு, பணவாட்டம் என்ற நிலையில் உள்ளது.

மதிப்பீட்டு வாரத்தில், ஆண்டுக் கணக்கின் அடிப்படையில், வெங்காயத்தின் விலை, 79.10 சதவீதம் என்ற அளவில் சரிவடைந்து காணப்பட்டது. காய்கறிகள் (47.06 சதவீதம்), உருளைக்கிழங்கு (22.46 சதவீதம்), கோதுமை (3.37 சதவீதம்) ஆகியவற்றின் விலை குறைந்துள்ளது.அதேசமயம், புரதச் சத்து நிறைந்த உணவுப் பொருட்களின் விலை ஆண்டுக் கணக்கின் அடிப்படையில் உயர்ந்திருந்தது.

குறிப்பாக, பருப்பு வகைகள் (12.77 சதவீதம்), பால் ( 12.25 சதவீதம்), மீன், முட்டை, இறைச்சி ( 20.33 சதவீதம்) ஆகியவற்றின் விலை அதிகரித்திருந்தது. இவை தவிர, பழங்கள் விலை, 5.17 சதவீதமும், உணவு தானியங்களின் விலை 2.71 சதவீதமும் உயர்ந்துள்ளது. முக்கிய பொருட்களுக்கான பணவீக்கம் 1.87 சதவீதம் என்ற அளவில் குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 2.47 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து காணப்பட்டது. மொத்த விலைக் குறியீட்டு எண் கணக்கீடு செய்வதில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு 20 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.
உணவு சாரா பொருட்கள் பிரிவில், நூலிழை மற்றும் எண்ணெய் வித்துகளின் விலை, 0.56 சதவீதம் என்ற அளவில் குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில் 1.84 சதவீதம் என்ற அளவில் உயர்ந்து காணப்பட்டது.மின்சாரம் மற்றும் எரிபொருட்களுக்கான பணவீக்கம் எந்த வித மாற்றமுமின்றி 14.45 சதவீதம் என்ற அளவிலேயே உள்ளது. உணவுப் பொருள் பணவீக்கம் மற்றும் பொதுப் பணவீக்கம் குறைந்து வருவதால், ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதங்களை விரைவில் குறைக்க வாய்ப்புள்ளதாக பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுமா?**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2012,22:59 IST

ஈரோடு: ஈரோடு மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் டி.ஆர்.ஓ., கார்த்திகா தலைமையில் நடந்தது. கூட்ட விவாதம் வருமாறு:தமிழக விவசாயிகள் சங்கம் பெரியசாமி: பவானி பகுதியில் நெல் அறுவடை நடக்கிறது. கொள்முதல் நிலையங்களில், ஒரு நாளைக்கு, நான்கு லட்சம் ரூபாய்க்குத்தான் கொள்முதல் செய்ய அரசு நிதி வழங்கியதாக கூறி, முழு அளவில் கொள்முதல்

செய்வதில்லை. கூடுதல் தொகை வழங்க வேண்டும். அல்லது கூடுதலாக கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும். சர்க்கரை ஆலைகள் ஒப்பந்தம் செய்து கொண்டபடி, விவசாயிகளுக்கு பணம் வழங்கவில்லை.டி.ஆர்.ஓ.,: சர்க்கரை ஆலை பிரச்னை குறித்து, முத்தரப்பு கூட்டம் கலெக்டர் தலைமையில் நடத்தி தீர்வு காணலாம்.மேட்டூர் வலதுகரை வாய்க்கால் விவசாயிகள் சங்கம் மோகன்: பவானியில் இருந்து மேட்டூர் செல்லும் ரோடு மிகவும் மோசமாக உள்ளது. அதிகாரிகளிடம் கேட்டால், இன்னும் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு முழுமையாக ஒப்படைக்கவில்லை. ஒப்படைத்ததும் பணி செய்வோம், என்கின்றனர்.

தடப்பள்ளி - அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்கம் தளபதி: சொட்டுநீர் பாசனம் அமைக்க, ஈரோடு மாவட்டத்தில், 1,200 ஹெக்டேரில் சிறு, குறு விவசாயிகளுக்கும், 300 ஹெக்டேரில் பெரிய விவசாயிகளுக்கும் மானியம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேவையான அளவு விவசாயிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும். விவசாய பூமி அருகே உள்ள தரிசு, புறம்போக்கு நிலங்களின் பாதை, ஒதுக்குப்புறங்களை 10, 15 ஆண்டுகள் பயன்படுத்தி வந்தால், அதற்கான அரசின் அனுமதிக்கப்பட்ட தொகையை செலுத்தி, அந்நிலத்தை விவசாயி, தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டத்தில், கொடுக்கப்பட்ட மனுக்கள் தீர்வு காணப்படாமல் உள்ளன.டி.ஆர்.ஓ.,: நிலத்துக்கான தொகை முடிவு செய்யப்படாததால், அம்மனுக்கள் தாமதமாகிறது. விரைவில் முடிவு காணப்படும்.தளபதி: கொள்முதல் நிலையங்களில், 41 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு எட்டு ரூபாய் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், 20 ரூபாய் பெறுகின்றனர். கூடுதலான 12 ரூபாய் அலுவலக செலவு என்கின்றனர். விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.காலிங்கராயன் பாசன சபை தலைவர் வேலாயுதம்: காலிங்கராயன் கால்வாயில், பவானியில் இருந்து கரையை பலப்படுத்தி, தடுப்புச்சுவர் எழுப்பி, சாயக்கழிவு, சாக்கடை கலக்காமல் தடுக்க வேண்டும்.கீழ்பவானி பாசன வாய்கால் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு வடிவேலு: ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகத்துக்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீதிமன்றத்தில் தடையாணை பெறுகின்றனர். இதனால், வளாகம் அமைவதில் சிக்கல் ஏற்படுகிறது.

வேலாயுதம், பெரியசாமி மற்றும் பல விவசாயிகள்: ஒருங்கிணைந்த வளாகம் அமைப்பதில் முறைகேடு நடக்கிறது. அதை சீரமைத்தபின், இதுபற்றி பேசலாம். மஞ்சள் விவசாயிகளுக்கு, அரசு, ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் அமைத்துத்தர வேண்டும்.இவ்வாறு விவாதம் நடந்தது.வேளாண் இணை இயக்குனர் அக்பர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

**கறவை மாடுகளுக்கு கடன் வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2012,01:47 IST

லாலாப்பேட்டை: பஞ்சப்பட்டி பாரத ஸ்டேட் வங்கி சார்பில் புதிய கறவை மாடு கடன் வழங்கும் மற்றும் பழைய கடனை திருப்பி செலுத்தும் முகாம் தாளியாம்பட்டியில் நடந்தது. முகாமில் திருச்சி மண்டல உதவி பொது மேலாளர் கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, புதிய கறவை மாடு கடன் பெறுதல் பற்றி விளக்கினார். உதவி பொது மேலாளர் கவுசல்யா வங்கிக்கடன் சிறப்பு அம்சங்கள் குறித்து பேசினார். ஆவின் பொது மேலாளர் நடராஜன், கூட்டுறவு சங்கம் நடத்தும் விதம், மக்களுக்கு அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து பேசினார். மேலும், புதிய மாடு கடன் பெறுவதற்கான முதல் ஒப்புதல் ஆணையை விவசாயிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில் வங்கி கிளை மேலாளர் அழகுவேல், கருப்பத்தூர் பஞ்சாயத்து தலைவர் ராஜலிங்கம், துணைப்பதிவாளர் சந்திரசேகரன், துரைராஜன், முத்துகிருஷ்ணன், கண்ணன், ராஜகுமார், ஆவின் கூட்டுறவு சங்க செயலாளர்கள் தானியாளம்பட்டி சீனி, அய்யனேரி நாகரத்தினம், வேங்கம்பட்டி சேகர் உட்பட பலர் பங்கேற்றனர்.

**சீஸன் மாறுபாட்டால் வரத்து குறைவு கரூரில் எகிறிது வாழைத்தார் "விலை'**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2012,01:47 IST

வேலாயுதம்பாளையம் : புகளூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் வாழைத்தார் வரத்து குறைவு காரணமாக விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. கரூர் மாவட்டம் புகளூர், செம்படாபாளையம், தோட்டக்குறிச்சி, தளவாபாளையம், கிழக்குதவிட்டுப்பாளையம், நொய்யல், மரவாபாளையம், புங்கோடை, முத்தனூர், நடையனூர், சேமங்கி, நத்தமேடு, திருக்காடுதுறை, கட்டிபாளையம், பாலத்துறை உள்பட புகளூர் சுற்றுப்புறங்களில் பல்வேறு இடங்களில் வாழைத்தார் 5,000 ஏக்கருக்கு மேல் பயிரிடப்பட்டுள்ளது. அதில் பூவன், வாழைத்தார், கற்புரவள்ளி, பச்சை நாடன் வாழைதார், மொந்தன் வாழை உள்ளிட்ட வகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. வாழைத்தார்கள் கரூர் மட்டுமின்றி நாமக்கல், சேலம், கோவை, நீலகிரி ஈரோடு உள்ளிட்ட பகுதிகளுக்கும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் அனுப்பபடுகிறது. சீஸன் மாறுபாடு காரணமாக வாழைத்தார் வரத்து மேற்கண்ட பகுதிகளிலிருந்து குறைந்துள்ளது. இதனால் ஒவ்வொரு ரகத்திற்கும் 20 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை தரத்திற்கு ஏற்ப விலை உயர்ந்துள்ளது. பூவன் 250 ரூபாயில் இருந்து 300க்கும், ரஸ்தாலி வாழைத்தார் 300 ரூபாயில் இருந்து 350க்கும், கற்புரவள்ளி 300 ரூபாயில் இருந்து 375 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. கோடைக்காலம்

நெருங்குவதால் ஒரு மொந்தன் வாழைக்காய் விலையும் மூன்று ரூபாயில் இருந்து ஐந்து ரூபாயாக உயர்ந்துள்ளது. "வரும் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் அதிகளவில் நடக்க உள்ளதால், வாழைத்தார் விலை மேலும் உயர வாய்ப்புண்டு' என வாழைத்தார் வியாபாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு பலன் தரும் ஏலக்காய் நாற்றுகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 27,2012,23:25 IST

கம்பம் : நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட, அதிக பலன் தரும் ஏலக்காய், மிளகு உள்ளிட்ட வாசனை திரவிய பயிர்களுக்கு நாற்றுகள் தர ஸ்பைசஸ் வாரியம் திட்டமிட்டுள்ளது. இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் வாசனை திரவிய பொருட்கள் மூலம் அன்னியச் செலவாணி கிடைக்கிறது. இவற்றின் ஏற்றுமதி சில ஆண்டுகளாக திருப்திகரமாக இல்லை.
வெளிநாடுகளில், இறக்குமதி செய்யப்படும் வாசனை திரவியப் பொருட்கள் மற்றும் உணவு பொருட்கள் மீதான கெடுபிடி சோதனைகளே இதற்கு காரணம். பயோ சிஸ்டத்தில் சாகுபடி செய்யப்படும் பொருட்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது.

உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பயன்படுத்தி சாகுபடி செய்த பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் போது, வெளிநாடு களில் பரிசோதனை செய்து, திருப்பி அனுப்பி விடுகின்றனர்.
அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் ரசாயன மருந்துகள் கலந்திருப்பது கண்டறியப்பட்டால், ஏற்றுமதி செய்ய முடியாது. இதுவே நமக்கு பெரிய தலைவலியாக உள்ளது.

குறிப்பாக ஏலக்காய், மிளகு உள்ளிட்ட வாசனை திரவியப் பொருட்கள் ஏற்றுமதி பாதிக்கப்படுகிறது. இதனால ஏலக்காய், மிளகு உள்ளிட்ட வாசனை திரவியப் பொருட்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட, அதிக பலன் தரும் ரக நாற்றுகளை மானிய விலையில் விவசாயிகளுக்கு சப்ளை செய்ய ஸ்பைசஸ் வாரியம் முடிவு செய்துள்ளது.

இதற்காக ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், கள ஆய்வுகள் மேற்கொள்ளவும், விவசாயிகளிடம் கலந்துரையாடல்கள் நடத்த உள்ளனர். ஸ்பைசஸ் வாரிய கள அதிகாரி ஒருவர் கூறுகையில்," விவசாயிகளுக்கு அதிக பலன் தரும் நாற்றுகள் வழங்கப்பட உள்ளது. ஆராய்ச்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஏற்றுமதியை அதிகப்படுத்த ஸ்பைசஸ் வாரியம் பணிகளை மேற்கொண்டுள் ளது. ஆண்டு பட்ஜெட்டில் ஆராய்ச்சி பணிகளுக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது' என்றார்.

**நெல் கொள் முதல் மையம் திறப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 28,2012,00:46 IST

கருத்தை பதிவு செய்ய

நரிக்குடி : நரிக்குடி அருகே நாலூரில் அரசு நெல்கொள் முதல் மையம் திறக்கப்பட்டது. ஊராட்சி தலைவர் பூமிநாதன் ,கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர் சுப்பிரமணியன், துணைப் பதிவாளர் சதாசிவம் துவக்கி வைத்தனர். அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

தினகரன்

**சொட்டுநீர் பாசனத்திற்கு 100 சதவீத மானியம் வேளாண்மை துறை தகவல்**

தூத்துக்குடி: விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன முறை அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து தூத்துக்குடி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலக செய்திக்குறிப்பு: சொட்டு நீர்ப்பாசன முறையை விவசாயிகள் கடைபிடிப்பதால் பயிருக்கு தேவையான அளவு நீர் வேரை சுற்றி மட்டும் வழங்கப்படுவதால் தண்ணீரும், மோட்டார் இயக்கும் நேரம் குறைவதால் மின்சாரமும் சேமிக்கப்படுகிறது. வேலையாட்கள் கூலி மிச்சப்படுகிறது. களை வளர்ச்சி குறை கிறது. மேடு, பள்ளம் உள்ள நிலத்திலும் சீராக தண்ணீர் பாய்ச்சலாம். இதனால் அதிக மகசூல் கிடைக்கிறது. மணற்பாங்கான நிலத்துக்கு சிறந்தது. மண் அரிமானம் குறைகிறது.

உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தண்ணீரில் கலந்து பாய்ச்சுவதால் உரம் வீணா காது. உரமிடும் செலவும் இல்லை. சொட்டு நீர் பாசன முறையை செயல்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் அரசு மானிய திட்டங்களை தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தி வரு கிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானிய மும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. 100 சதவீதம் மானியம் பெற சிறு, குறு விவசாயிக்கான

சான்றிதழை சம்பந்தப்பட்ட தாசில்தாரிடம் இருந்து பெற்று நிலத்தின் சிட்டா, 10(1) அடங்கல், வரைபடம், ரேஷன்கார்டு நகல் மற்றும் புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். மேற்கண்ட ஆவணங்களுடன் புதுக்கோட்டை வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை பல்கலை. சார்பில் தாழம்பேடு ஊராட்சியில் தகவல் மையம் திறப்பு**

திருக்கழுக்குன்றம்:திருக்கழுக்குன்றம் அடுத்த தாழம்பேடு ஊராட்சியில் தமிழ்நாடு கால்நடை அறிவியல் மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார் பில், தகவல் மையம் திறப்பு விழா நேற்று முன்தினம் நடந்தது. துணை வேந்தர் டாக்டர் பிரபாகரன் திறந்து வைத்தார்.

இதில் விவசாயிகளுக்கு கால்நடை முதலுதவி பெட்டி, நெற்பயிர்களை தாக்கும் பூச்சியை கட்டுப்படுத்தும் மருந்து, தாது உப்பு கலவை போன்றவை வழங்கப்பட்டது. இந்த மையத்தில் கிராமத்தில் உள்ளவர்களுக்கு கணினி பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

முன்னதாக கிராமத்தில் உள்ளவர்களுக்கு ஓட்டப்பந்தயம், கால்பந்தாட்டம், இசை நாற்காலி போட்டி, உறியடி, கோலப்போட்டி, கோணிப்பை ஓட்டப்பந்தயம் நடத்தி, பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

விழாவுக்கு, ஊராட்சி தலைவர் தாழை ரவி தலைமை வகித்தார். பேராசிரியர் குமாரவேல் வரவேற்றார். தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் கதிரேசன், முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெர்ஜினியா பல்கலைக்கழக பேராசிரியர் சுப்பையா இளங்குமரன், ஊராட்சி துணைத் தலைவர் தட்சிணாமூர்த்தி உள்பட வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மோகன் நன்றி கூறினார்.

**நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் 4 லட்சம் டன் சம்பா நெல் கொள்முதல் செய்ய இலக்கு**

**நுகர்பொருள் வாணிப கழக தலைவர் தகவல்**

நாகை: அரசின் நேரடி நிலையங்கள் மூலம் 4 லட்சம் டன் சம்பா நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்பொருள் வாணிப கழக தலைவர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில், கொள்முதல் செய்வது தொடர்பான ஆலோசனை கூட்டம் நாகை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தலைவர் கார்த்திகேயன் தலைமை வகித்தார். கலெக்டர் முனு சாமி முன்னிலை வகித்தார்.

கூட்டத்திற்கு பின், கார்த்திகேயன் கூறியதாவது:
நாகை மாவட்டத்தில் குறுவை சாகுபடியின்போது 170 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 74 ஆயிரத்து 903 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. மாவட்டத்தில் சம்பா நெல் 97,056 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சம்பாவில் 4 லட்சத்து 91 ஆயிரத்து 240 டன் மகசூல் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், நடப் பாண்டில் 4 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள் ளது. இதற்காக மாவட்டத் தில் 242 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.
சன்ன ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1180ம், பொது ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1130க்கும் கொள்முதல் செய்ய அரசு விலை நிர்ணயித்துள்ளது. அரசு அறிவித்துள்ள 20 சதவீத ஈரப்பதத்தை கணக்கில்கொண்டு, சுத்தமாக உள்ள நெல்லை மட்டும் கொள்முதல் செய்ய வேண்டும்.
இடைத்தரகர் கள் மற்றும் வியாபாரிகளை தடுக்கும் வகையில் நெல் கொண்டு வரும் ஒவ் வொரு விவசாயிக்கும் டோக்கன் வழங்கி, அவர்களிடம் இருந்து மாதிரி நெல் பெற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் கொள்முதல் செய்ய வேண்டும். அப்போதுதான் இடைத்தரகர்களையும், வியாபாரிகளையும் தவிர்க்க முடியும்.
கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் திடீர் மழையால் பாதிக்கப்படாத வகையில் தார்பா யால் மூடி வைக்க வேண் டும். நெல் மூட்டைகளை உடனுக்குடன் கிடங்குகளுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் சேதத்தை தவிர்க்கலாம். நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கிடங்குகளில் போதுமான சுமை யாளர்கள் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள் ளது.
இவ்வாறு கார்த்திக்கேயன் தெரிவித்தார். டிஆர்ஓ ஆசியா மரியம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் கலை ராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கம்பம் பகுதியில் பீட்ரூட் விலை கிடு கிடு உயர்வு**

கம்பம், : கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் தற்போது பீட்ரூட் விலை படிப்படியாக உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
கம்பம், கூடலுீர், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி, இராயப்பன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் பீட்ரூட், நுீக்கல், முள்ளங்கி போன்ற காயகறிகள் விவசாயம் நடைபெற்று வருகிறது. இங்கு விளையும் இந்த காய்கறிகள் சின்னமனுீர், ஒட்டன்சத்திரம், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, கும்பகோணம் மற்றும் அதிகளவு கேரளாவிற்கும் விற்பனைக்காக அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது தை மாத விஷேச தினங்கள் ஆரம்பித்து விட்டதால் கடந்த சில தினங்களாக பீட்ரூட் விற்பனை கிடு கிடு என உயரத்துவங்கியுள்ளது. கிலோ 6 முதல் 7 வரை விற்பனை செய்யப்படுவதால் சராசரி 80 கிலோ எடை கொண்ட மூடை ரூபாய் 500 முதல் 550 வரை விற்பனையாகிறது. மேலும் விலை உயரும் வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயி மொக்கையன் கூறுகையில், இனி மேல் 3 மாதத்திற்கு திருமணம் உள்ளிட்ட பல்வேறு விஷேச தினங்கள் உள்ளது. இதன் காரணமாக காய்கறிகளின் பயன்பாடு அதிகரிக்கும் நிலையில் பீட்ரூட்டிற்கு விலை மேலும் உயரும் வாய்ப்புகள் உள்ளது. தற்போது கிலோ 7 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உரம், மருந்து, விலை அதிகளவு உயர்ந்து விட்டதால் சராசரி கிலோ 10 முதல் 15 வரை விற்பனை செய்யப்பட்டால் விவசாயிகளுக்கு போதிய லாபம் கிடைக்கும், என்றார்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *ஜனவரி 14–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் –1.03 சதவீதம்*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*ஜனவரி 14–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பணவீக்கம் –1.03 சதவீதமாக குறைந்தது. இது, இதற்கு முந்தைய வாரத்தில் –0.42 சதவீதமாக இருந்தது. தொடர்ந்து நான்காவது வாரமாக உணவு பணவீக்கம் மைனசாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆக, உணவு பணவீக்கம் சரிவடைந்து வருகிறது. இதனை உணவு பொருள் பணவாட்டம் என்று சொல்லலாம்.*

*வெங்காயம்*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில்*

வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு விலை முறையே 79.10 சதவீதம் மற்றும் 22.46 சதவீதம் குறைந்ததையடுத்து, ஒட்டுமொத்தத்தில் காய்கறி விலை 47.06 சதவீதம் குறைந்துள்ளது.
கோதுமை விலை 3.37 சதவீதம் குறைந்தது.
உணவு பணவீக்கம் சரிவடைந்து வரும் நிலையில், கடந்த 2011 டிசம்பர் மாதத்தில் பொது பணவீக்கம் இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 7.47 சதவீதமாக குறைந்தது. இதன் காரணமாக பாரத ரிசர்வ் வங்கி இம்மாதம் 24–ந் தேதி வெளியிட்ட பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் வங்கிகளுக்கான ரொக்க இருப்பு விகிதத்தை 6 சதவீதத்திலிருந்து 5.50 சதவீதமாக குறைத்தது. இதனால், வங்கிகளுக்கு கூடுதலாக ரூ.32,000 கோடி நிதி கிடைக்கும். எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும்.
கரீஃப் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக இருந்ததும், உணவு பணவீக்கம் சரிந்துள்ளதற்கு ஒரு முக்கிய காரணமாகும். அதேசமயம், கடந்த 2011–ஆம் ஆண்டின் இதே வாரத்தில் இது 17 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. இதன் காரணமாக, இதனுடன் ஒப்பிடும்போது உணவு பணவீக்கம் குறைந்துள்ளதாக தோன்றுகிறது.
அசைவ உணவு பொருள்கள்
இதனை வெளிப்படுத்துகின்ற வகையில், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் இதர உணவு பொருள்கள் விலை மிகவும் அதிகமாக உள்ளது.
கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் மற்றும் பால் விலை முறையே 12.77 சதவீதம் மற்றும் 12.25 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 20.33 சதவீதம் அதிகரித்துள்ளது. பழங்கள் விலை 5.17 சதவீதமும், தானியங்கள் விலை 2.71 சதவீதமும் உயர்ந்துள்ளது.